


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.09.2024) சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கு நேரில் சென்று, அங்கு பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.09.2024) சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கு நேரில் சென்று, அங்கு பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைச் சந்தித்துப் பேசிய பின்னர், முதலமைச்சர் அவர்கள் வெளிநாடுகளுக்கு மேற்கொண்ட அரசு முறைப் பயணங்கள் குறித்து வைக்கப்பட்டிருந்த புகைப்படப் பலகையில் "வாழ்த்துகள். 50 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு நமது இலக்கு" என்று எழுதி கையொப்பமிட்டார்.

# 50 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிட இலக்கு!

## தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனப் பணியாளர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரை!

**சென்னை,செப்.27-**

**50 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிட தமிழ்நாடு தொழில் வழிகாட்டு நிறுவன பணியாளர்களுக்கு இலக்கு நிர்ணயித்துள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

சென்னையிலுள்ள தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கு நேரில் சென்று, அங்கு பணிபுரியும் பணியாளர்களை சந்தித்துப் பேசியது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**அரசு நிர்வாகத்தில் உள்ள இளம் ரத்தங்களான தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் பணியாளர்களைச் சந்தித்தேன்.**

**இவர்களுடைய சிறப்பான பணியினால், நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு ஈர்த்த 10 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகளில் 60 விழுக்காடு பணிகள் நிறைவேறியிருக்கிறது; மீதமுள்ள 40 விழுக்காடு பணிகள் நிறைவேறுவதற்கான பணிகளை விரைந்து செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளேன்.**

**50 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிட வேண்டும் என அவர்களுக்கு இலக்கு நிர்ணயித்துள்ளேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகளுக்கான ஜி.எஸ்.டி வரி

# ரூ.1000க்கு மேல் விலையுள்ள ஆடைகளுக்கு வரி உயர்கிறது!

புதுடெல்லி, செப். 27–

நாடு முழுவதும் ஒரே வரி என கூறி சரக்கு மற்றும் சேவை வரி எனும் ஜி.எஸ்.டி., வரியை ஒன்றிய பா.ஜ.க., அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. பொதுமக்கள் பயன்படுத்தும் மிக முக்கியமாக அத்தியாவசிய பொருட்கள் உட்பட அனைத்து பொருட்களுக்கும் ஜி.எஸ்.டி., வரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. இந்நிலையில், அவ்வப்போது நடைபெறும் ஜி.எஸ்.டி., கூட்டத்தில், சில பொருட்களுக்கு வரியை குறைக்கவும், சில பொருட்களையும் வரியை உயர்த்தவும் ஒன்றிய அரசுக்கு பரிந்துரை வழங்கப்படுகிறது. அதனை பரிசீலித்து ஜி.எஸ்.டி., வரியை ஒன்றிய அரசு நிர்ணயித்து வருகிறது. அந்தவகையில், தற்போது, 1000 ரூபாய்க்கு மேல் விலையுள்ள ஜவுளி மற்றும் ஆயத்த ஆடைகளுக்கு ஜி.எஸ்.டி வரியை உயர்த்த ஒன்றிய அரசுக்கு ஜி.எஸ்.டி., குழு பரிந்துரை செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. 5% சதவீதமாக உள்ள வரியை 12 அல்லது 18 சதவிகிதமாக உயர்த்த கோவாவில் நடைபெற்ற ஜி.எஸ்.டி., குழு கூட்டத்தில் ஒன்றிய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மருத்துவ காப்பீடு மற்றும் ஆயுள் காப்பீட்டு பிரீமியத்திற்கு ஜி.எஸ்.டி வரி குறைப்பது தொடர்பான விவகாரத்தில் முடிவு எட்டப்படவில்லை. இதுகுறித்து விரிவாக விவாதிக்க அடுத்தக் கூட்டம் அக்டோபர் 19ஆம் தேதி டெல்லியில் நடைபெற உள்ளது.

### தி.மு.க. - வி.சி.க. இடையே

# எந்தவித விரிசலும் இல்லை - சலசலப்பும் இல்லை!

## விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. பேட்டி!



கோவை, செப்.27-

"தி.மு.க., வி.சி.க, இடையே எந்தவித விரிசலும் இலலை, சலசலப்பும் இல்லை" என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி. கூறியுள்ளார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி நேற்று முன்தினம் கோவை வந்தார். கோவை விமான நிலையத்தில் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

தி.மு.க. மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய 2 கூட்டணி கட்சிகளுக்கு இடையில் எந்த சலசலப்பும் இல்லை. விரிசலும் இல்லை. அப்படி விரிசல் உருவாகுவதற்கு வாய்ப்பும் இல்லை.

என்னுடைய ஊடக பக்கத்தில் பதிவான ஒரு சின்ன வீடியோ, ஆட்சியிலும் பங்கு, அதிகாரத்திலும் பங்கு என்ற கருத்தை விவாதத்துக்கு பலரும் எடுத்துக் கொண்டனர். அது மேலும் மேலும் விவாதத்துக்கு வழி வகுத்து விட்டது.

அதனால் தி.மு.க., விடுதலைச் சிறுத்தைகள் இடையில் எந்த சிக்கலும் எழாது. சிக்கலும் எழுவதற்கு வாய்ப்பு இல்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**நடவடிக்கை இருக்கும்!**

'ஆதவ் அர்ஜுனா மீது ஆ.ராசா எம்.பி. நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறியிருக்கிறாரே? அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?' என நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு திருமாவளவன் பதில் அளித்து கூறும்போது, "கட்சியில் உள்ள முன்னணி தோழர்களோடு கலந்து பேசி தான் எந்த நடவடிக்கையும் இருக்கும். கட்சி விவகாரங்களை முன்னணி பொறுப்பாளர்கள், பொதுச்செயலாளர், உயர்நிலைக்கு முவில் இடம்பெற்றுள்ள தோழர்களுடன் தொலைபேசி மூலமாக பேசி இருக்கிறேன். மீண்டும் கலந்து பேசி நடவடிக்கை இருக்கும்" என தெரிவித்தார்.

### பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ள மதுரை வருகை தரும்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர் பி.மூர்த்தி – கோ.தளபதி – மு.மணிமாறன் அறிக்கை!







மதுரை, செப் 27-

மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞரணி செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு வருகிற 29ம்தேதி மதுரை விமான நிலையத்தில் எழுச்சிமிகு வரவேற்பு அளிக்கப்படுகிறது என மாவட்டச் செயலாளர்கள் -அமைச்சர் பி.மூர்த்தி - கோ.தளபதி எம்.எல்.ஏ. - மு.மணிமாறன் ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அவர்களது அறிவிப்பு வருமாறு:-

கழக இளைஞரணி செயலாளர் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 29ஆம் தேதி மதுரையில் பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்க வருவதையொட்டி அன்றைய தினம் மதுரை விமான நிலையத்தில் மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கப்பட உள்ளதாக மாவட்ட செயலாளர்கள் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நாடு போற்றும் நம் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமெரிக்க சுற்றுப் பயணம் சென்று தமிழ் நாட்டில் அதிகப்படியான வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் புதிய தொழில் முதலீடுகளை பெற்று வந்தார். இதை நாடே போற்றியது, தலைவரின் வழியில் நம் இளந்தலைவர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதன் ஒரு பகுதியாக வருகிற 29ஆம் தேதி மதுரையில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்க 29.09.2024 ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணியளவில் விமானம் மூலம், கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரை வருகிறார்.

அவருக்கு மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்க உள்ளதால் கழகத்தினர் திரளாக பங்கேற்று, கையில் இரு வண்ணக் கொடியேந்தி வரவேற்பு கொடுத்திட வேண்டுமென மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையில் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101 வது பிறந்த நாளை முன்னிட்டு நாகர்கோவில் மாநகராட்சி 18 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ்.அமல செல்வன் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியானது தமிழ்நாடு பார்வையற்றோர், இயலாதோர் அறக்கட்டளை, அனந்தன் நகரில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பார்வையற்றோர்களுக்கு மளிகை பொருட்களும், பொருளாதார உதவி போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர் த.தங்கராஜா, பார்வையற்றோர், இயலாதோர் அறக்கட்டளை இயக்குநர் அருள் செல்வன், ரெ.சகாய மைக்கேல் ராஜன், வி.அகஸ்தீசன், ஜே.எம்.லதா கலைவாணன், பூ.சிதம்பரம், மு.சேக்மீரான் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### நுங்கம்பாக்கம் – காம்தார் நகர் மெயின் ரோட்டிற்கு

# "எஸ்.பி.பாலசுப்பிரமணியம் சாலை" என பெயர் சூட்டப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, செப். 27 -**

**திரை இசைப் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் அவர் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள நுங்கம்பாக்கம், காம்தார் நகர் மெயின் ரோட்டிற்கு "எஸ்.பி. பாலசுப்பிரமணியம் சாலை" எனப் பெயர் சூட்டப்படும் என்று - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இது குறித்து தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

பல்வேறு மொழிகளில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி, தன்னுடைய அமுதக் குரலால் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் அரை நூற்றாண்டுக்கும் மேலாக இசை மழை பொழிந்ததோடு, பல படங்களுக்கு இசையமைத்தும், திரைப் படங்களில் நடித்தும், பல்துறை வித்தகராக விளங்கியவரும், ஒன்றிய அரசின் பத்மஸ்ரீ, பத்ம விபூஷன் விருதுகள் பெற்றவரும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்பிற்குரியவருமான எஸ்.பி.பாலசுப்பிரமணியம் அவர்கள், கடந்த 25-9-2020 அன்று இதே நாளன்று நம்மை விட்டுப் பிரிந்தார். காலம் அவரைப் பிரித்தாலும், நம் அனைவரின் மனதிலும் நீங்கா இடம் பெற்றவர் அவர்.

அன்னார் தமிழ்த் திரையுலகிற்கு ஆற்றிய சேவையைப் போற்றும் வகையிலும், அவரின் புகழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையிலும், அவர் வாழ்ந்த இல்லம் அமைந்துள்ள நுங்கம்பாக்கம் காம்தார் நகர் மெயின் ரோட்டிற்கு "எஸ்.பி.பாலசுப்பிரமணியம் சாலை" எனப் பெயரிடப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### திண்டுக்கல் மேற்கு மாவட்ட

# தி.மு.க. இளைஞரணி நிர்வாகிகள் நேர்காணல்!

## அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது!

ஒட்டன்சத்திரம். செப். 27.

திண்டுக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி ஒன்றிய, நகர, பேரூர் கழகத் துணை அமைப்பாளர் ஆலோசனை கூட்டம் மற்றும் இளைஞர் அணி புதிய நிர்வாகிகள் தேர்வுக்கான நேர்காணல் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது. நேர்காணலில் திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், நத்தம், குஜிலியம்பாறை பகுதிகளைச் சேர்ந்த புதிய இளைஞர் அணி பொறுப்புகளுக்கு விண்ணப்பம் செய்தவர்கள் கலந்து கொண்டனர். நேர்காணலில் ஒன்றியச் செயலாளர்கள் , ஜோதீஸ்வரன், சுப்பிரமணி, சீனிவாசன், தர்மராஜ், தங்கராஜ், சுப்பையன்,கவிதா பார்த்திபன், ராஜலிங்கம், ரத்தினகுமார், பழனிச்சாமி, மோகன், நகரச் செயலாளர் வெள்ளைச்சாமி, மாவட்டப் பொருளாளர், விஜயன் , செயற்குழு உறுப்பினர் ஷேக் சிக்கந்தர் பாட்ஷா , பேரூர் செயலாளர்கள் கணேசன், கருப்பண்ணன், ராஜ்மோகன், கதிரவன், செந்தில்குமார் , மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஹரிஹரசுதன், துணை அமைப்பாளர்கள் பாண்டியராஜன், ஆனந்தராஜ், ரவிசங்கர், ராஜ்குமார், இப்ரில் ஆசித், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் அசோக் வேலுச்சாமி, தண்டபாணி, முருகானந்தம் உள்ளிட்ட திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி ஒன்றிய, நகர, பேரூர் கழகத் துணை அமைப்பாளர் ஆலோசனை கூட்டம் மற்றும் இளைஞர் அணி புதிய நிர்வாகிகள் தேர்வுக்கான நேர்காணல் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது. நேர்காணலில் திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்தஒட்டன்சத்திரம், வேடசந்தூர், நத்தம், குஜிலியம்பாறை பகுதிகளைச் சேர்ந்த புதிய இளைஞர் அணி பொறுப்புகளுக்கு விண்ணப்பம் செய்தவர்கள் கலந்து கொண்டனர்.